**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *447*** **நாள்: *01.12.2023***

**மணலி மண்டலத்திற்குட்பட்ட சி.பி.சி.எல். நகர் எரிவாயு தகனடையில் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், பொதுமக்கள் மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட சாஸ்திரி நகர் எரிவாயு தகனமேடையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு-*18*க்குட்பட்ட சி.பி.சி.எல். நகரில் செயல்பட்டு வரும் எரிவாயு தகனமேடையில் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், *02.12.2023* முதல் *28.02.2024* வரை *3* மாதங்களுக்கு மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, சி.பி.சி.எல். நகரில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் மாதவரம் மண்டலம், காமராஜர் சாலை, சாஸ்திரி நகரில் செயல்பட்டு வரும் எரிவாயு தகனமேடையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**